# தமிழ் முரசு

TAMIL MURASU

VOICE OF THE COMMUNITY

எண்பதாவது ஆண்டுக் கொண்டாட்டம் · 80 YEARS


கடத்தல்

ரூ.4 கோடி போதைப் புடவை 4



தாவூத் அங்கே

பாக்.கில்தான் பயங்கரவாதி: இந்தியா 7



மஇகாவில் புயல்

ரகளைக்கு நடுவே தலைவரான சுப்பிரமணியம் 9



ரூ.11 கோடி

இவர்தான் பண தேவதை 18




sph A SINGAPORE PRESS HOLDINGS PUBLICATION MCI (P) 014/03/2015 http://www.tamilmurasu.com.sg தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி 23 ஆகஸ்ட் 2015 • ஞாயிறு • 60 காசு


# ‘தமிழ் இலக்கிய கணினிமயம் தொடரட்டும்’

ப. பாலசுப்பிரமணியம்

தமிழ் இலக்கியப் படைப்புகளை மின்னிலக்கமயமாக்கும் பணி தொடரவேண்டும் என்று துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம், பிரதமர் அலுவலக அமைச்சர் எஸ் ஈஸ்வரன் இருவரும் நேற்று வலியுறுத்தினர்.

இன்றைய தலைமுறையின் இலக்கியப் படைப்புகள் நாளைய தலைமுறைக்காகக் கட்டாயம் கட்டிக்காக்கப்பட வேண்டும் என்று நிதி அமைச்சருமான தர்மன் தெரிவித்தார்.

இதோடு மட்டுமின்றி, சிறிய தமிழ்ச் சமூகத்தின் நினைவலைகள் மூலம் நாடு முழுவதும் பலன் அடையும் வகையில் தமிழ்ப் படைப்புகள் இதர மொழிகளில் மொழி பெயர்க்கப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சிங்கப்பூரின் பொன்விழாவை முன்னிட்டு, 1965ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை பதிப்பிக்கப்பட்ட சிங்கப்பூர் தமிழ் இலக்கிய நூல்களை மின்னிலக்கமயமாக்கும் திட்டத்தின் நிறைவு விழா நேற்று தேசிய நூலக வாரிய வளாகத்தில் நடந்தது. துணைப் பிரதமருடன், இந்த மின்னிலக்கத் திட்டத்தின் புரவலருமான எஸ். ஈஸ்வரனும் அதில் கலந்துகொண்டார்.

தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படும் உ.வே. சாமிநாத ஐயர் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஓலைச்சுவடிகளில் இருந்த அரிய தமிழ்ப் பொக்கிஷங்களை எல்லாம் அன்றைய தொழில்நுட்பமான புத்தக வடிவில் கொண்டு வர அரும்பாடு பட்டார்.

அதேபோல் இப்போது மின்னிலக்க தொழில்நுட்பத்துக்கு நாம் மாற்றுகிறோம் என்று துணைப் பிரதமர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் தமிழ்ச் சமூகம் சிறியது என்றாலும் அதன் வேர்கள் ஆழமானவை, வலுமிக்கவை என்றார் திரு தர்மன்.

அந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு ஈஸ்வரன், தங்கள் கலாசாரத்தை, மரபுடைமையை இழந்துவிடும் ஆபத்து பெரிய சமூகங்களைக் காட்டிலும் சிறிய சமூகங்களுக்கு அதிகம் என்பதால் அவற்றைக் கட்டிக்காக்க அந்த சமூகங்கள் கூடுதலாக உழைக்க வேண்டும் என்றார்.

இந்தத் திட்டத்துக்கு இதர பல அமைப்புகளும் ஆதரவு தந்தது குறிப்பிடத் தக்கது என்றும் திரு ஈஸ்வரன் கூறினார்.

தமிழ் மின்னிலக்க மரபுடைமை குழுமம், தேசிய நூலக வாரியத்துடன் இணைந்து சுமார் 350 உள்ளூர் படைப்புகளை மின்மயமாக்கியுள்ளது. பொதுமக்கள் http://eresources.nlb.gov.sg/printheritage/ இணையப் பக்கத்தில் தமிழ் புத்தகங்களைப் பார்வையிடலாம்.



பிரதமர் அலுவலக அமைச்சரும் தமிழ் மின்னிலக்கத் திட்டத்தின் புரவலருமான எஸ் ஈஸ்வரன் உடனிருக்க, சிறப்பு விருந்தினராக வருகை அளித்த துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னம் (வலது) மயில் இறகு போன்ற விசையை அழுத்தி நேற்றைய நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார். படம்: த. கவி